


18.08.2024

தலைப்புச் செய்திகள்

- இந்திய கடலோர காவல்படையின் கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மைய புதிய கட்டிடம் மற்றும் மாசு மீட்பு மையத்தை பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் சென்னையில் இன்று மாலை திறந்து வைக்கிறார்.

- முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதியின் நூற்றாண்டு நினைவு நாணயம் இன்று வெளியிடப்படுவது மகிழ்ச்சி அளிப்பதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

- தமிழ்நாட்டில் குரங்கம்மை பாதிப்பு எதுவும் இல்லை என்று மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்ரமணியன் கூறியுள்ளார்

- திருப்பூர் மாவட்டம் திருமூர்த்தி அணையிலிருந்து பாசனத்திற்காக இன்று தண்ணீர் திறக்கப்பட்டது.

- நீலகிரி, கோவை, திருப்பூர், உள்ளிட்ட 12 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இனி விரிவான செய்திகள்

ராஜ்நாத் சிங்

சென்னையில் இந்திய கடலோர காவல்படையின் கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தின் புதிய கட்டிடத்தையும், கடல்சார் மாசு மீட்பு மையத்தையும் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இன்று மாலை திறந்து வைக்கிறார்.

கடல்சார் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையிலும், அவசர பேரிடர் சூழலில் மீட்பு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளும் வகையிலும் இம்மையம் செயல்படும்.

கடல் பகுதிகளில் எண்ணெய் மற்றும் இரசாயன பொருட்கள் கலப்பதால் ஏற்படும் மாசு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு இக்கடல்சார் மீட்பு மையம் பெரிதும் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதுச்சேரி கடலோர காவல்படை விமானதள வளாகத்தையும் திரு. ராஜ்நாத் சிங் இன்று திறந்து வைக்கிறார்.

தமது சென்னை பயணத்தின் ஒருபகுதியாக திரு. ராஜ்நாத் சிங், தமிழக முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதியின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவில் அவரது உருவம் பொறித்த 100 ரூபாய் நினைவு நாணயத்தையும் வெளியிடுகிறார்.

❖❖❖❖❖❖❖❖

பிரதமர் கடிதம்

இதனிடையே பிரதமர் திரு. நரேந்திரமோடி, முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலினுக்கு எழுதியுள்ள கடிதத்தில், முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதியின் உருவம் பொறித்த 100 ரூபாய் நாணயம் இன்று வெளியிடப்படவுள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்திய அரசியலிலும், இலக்கியத்திலும் மு. கருணாநிதி ஆளுமையுடன் திகழ்ந்தவர் என்று குறிப்பிட்டுள்ள அவர்,

தமிழ்மொழியையும், கலாச்சாரத்தையும் பேணி காப்பதில் அன்னாரது பங்களிப்பு மகத்தானது என்றும் கூறியுள்ளார்.

வரும் 2047-ஆம் ஆண்டில் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் மத்திய அரசின் முயற்சியில் கருணாநிதியின் தொலைநோக்கு பார்வை மற்றும் கொள்கைகள் வழிகாட்டியாக திகழும் என்றும் பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பிரதமரின் இக்கடிதத்திற்கு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தமது சமூக வலைதளப்பதிவில் நன்றி தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

எஸ்.ஜெய்சங்கர்

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. எஸ்.ஜெய்சங்கர், அரசுமுறை பயணமாக இன்று குவைத் சென்றடைந்தார்

அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. அப்துல்லா அலி அல் யஹ்யா-வை சந்திக்கும் அவர், இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, பாதுகாப்பு, கலாச்சாரம் உள்ளிட்டவை குறித்து ஆலோசனைகளை மேற்கொள்கிறார்.

இச்சந்திப்பின் போது சர்வதேச மற்றும் பிராந்திய பிரச்சனைகள் குறித்தும் விவாதிக்கப்படும்.

❖❖❖❖❖❖❖❖

ஜே.பி.நட்டா

நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் குரங்கம்மை தடுப்பு முன்னெச்சரிக்கை குறித்து மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு. ஜே.பி.நட்டா ஆய்வுசெய்தார்.

புதுதில்லியில் குரங்கம்மை நோய் பரிசோதனை ஆய்வகங்களின் தயார்நிலை, நோய் பாதிப்பு கண்டறியப்படும் பட்சத்தில் நோயாளிகளை தனிமைப் படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் குறித்து உயர்மட்ட ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

இதனிடையே தமிழ்நாட்டில் குரங்கம்மை பாதிப்பு இதுவரை கண்டறியப்படவில்லை என்று மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசியஅவர், சர்வதேச விமான நிலையங்களில் பயணிகளை தீவிரமான கண்காணிக்க உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், போலி மருத்துவர்களை கண்டறிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

அமித்ஷா

குடியுரிமை திருத்த சட்டத்தின்கீழ் பாகிஸ்தானை சேர்ந்த 188 பேருக்கு குடியுரிமை சான்றிதழ்களை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா அஹமதாபாத்தில் இன்று வழங்கினார்.

ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளையும் அமைச்சர் இன்று தொடங்கி வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

ஜீதேந்திர சிங்

விண்வெளியில் இந்தியாவின் விண்வெளி நிலையம் வரும் 2035-ஆம் ஆண்டிற்குள் நிறுவப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக மத்திய விண்வெளித்துறை இணையமைச்சர் டாக்டர் ஜீதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டியில் விண்வெளித் துறைக்கு மத்திய பட்ஜெட்டில் போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

அர்ஸு ராணா டியூபா

நேபாள வெளியுறவுத்துறை அமைச்சர் அர்ஸு ராணா டியூபா 5 நாள் அரசுமுறை பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

இந்த பயணத்தின் போது இருநாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கருடன் ஆலோசனை மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

மு.பெ.சாமிநாதன்

திருப்பூர் மாவட்டம் திருமூர்த்தி அணையிலிருந்து பாசனத்திற்காக தண்ணீரை மாநில தமிழ்வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் இன்று திறந்து வைத்தார்.

120 நாட்களுக்கு சுழற்சி முறையில் திறக்கப்படும் இத்தண்ணீரின் மூலம் 94 ஆயிரத்து 201 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

பொன்.குமார்

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் முதியோர் இல்லம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தலைவர் திரு. பொன்.குமார் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் உறுப்பினர்கள் உடனான கலந்தாய்வு கூட்டத்தில் பங்கேற்று இன்று பேசியஅவர், மாநில அரசின் பல்வேறு நலத்திட்டங்களால் சுகாதாரம் மற்றும் தொழில்துறையில் தமிழகம் முன்னிலை வகிப்பதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

அண்ணாமலை

பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ஸ்ரீபெரும்புதூர், சென்னை ஆகிய இடங்களில் மலிவு விலை வாடகை வீட்டு வளாகங்கள் திட்டம் தொடங்கப்பட்டது என்று பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

தனது சமூக வலைதளப்பதிவில் இதனை தெரிவித்துள்ள அவர், 707 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட வல்லம் வடகலில் உள்ள தங்குமிட கட்டிடத்திற்கு மத்திய அரசு வங்கி கடனுதவி வழங்கி உள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

அகழாய்வு

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை விஜய கரிசல் குளத்தில் 3-வது கட்ட அகழாய்வில் புள்ளிகள் பொறிக்கப்பட்ட சுடுமண் முத்திரை, கல்பந்து, விளக்கு உள்ளிட்ட பொருட்கள் இன்று கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தொல்லியல் துறை தள இயக்குநர் பொன் பாஸ்கர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

பூலித்தேவன்

விடுதலை போராட்ட வீரர் பூலித்தேவனின் 309-வது பிறந்தநாள் வரும் ஒன்றாம் தேதி கொண்டாடப்பட உள்ளதை அடுத்து இன்றுமுதல் வரும் 21-ம் தேதி வரை தென்காசி மாவட்டத்தில் தடை உத்தரவு பிறப்பிக்கப்படுவதாக ஆட்சித் தலைவர் திரு. கமல்கிஷோர் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

இருவரி

வேலூர் மாவட்டத்தில் பிரதமரின் சூரியஒளி தகடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் தகடுகள் பொருத்த 78 ஆயிரம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படும் என்று மின்வாரியம் தெரிவித்துள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அரசு பள்ளிகளை மேம்படுத்துவதற்கான நம் பள்ளி ! நம்ம ஊரு ! திட்டத்திற்கு பொதுமக்கள் நிதியுதவிகளை வழங்கலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், முன்னாள் மாணாக்கர் உள்ளிட்டோர் வழங்கும் நிதியுதவிகளுக்கு வரி விலக்கு அளிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மயிலாடுதுறையில் பெண்குழந்தைகளை பாதுகாப்போம் ! பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் ! திட்டத்தின் கீழ் நாளை நடைபெறவுள்ள மகளிர் மினி மாரத்தான் போட்டியில் பங்கேற்க விரும்புவோர் மாவட்ட விளையாட்டு அலுவலகத்தில் இன்றுமாலை 5 மணிக்குள் பெயர்களை பதிவு செய்யுமாறு ஆட்சித்தலைவர் திரு.மகாபாரதி தெரிவித்துள்ளார்.

திருச்சி மாவட்டத்தில் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கான சிறப்பு தொழில்கடன் முகாம் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக அலுவலகத்தில் நாளை தொடங்கி அடுத்தமாதம் 6-ம் தேதிவரை நடைபெற உள்ளது.

தகுதியுடையோர் இம்முகாமை பயன்படுத்திக் கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திரு. மா. பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பழைய சிறுவாங்கூர், பரிக்கல், சீதேவி, கரடியார், பொய்குணம் பகுதிகளில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் நாளைமறுநாள் நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு. பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் நரசிங்க நல்லூரில் அண்மையில் ஏரியில் மூழ்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்ட ஒருலட்சம் ரூபாய்க்கான காசோலையை ஆட்சித்தலைவர் டாக்டர் பழனி வழங்கினார்.

நீலகிரி மாவட்டத்தில் மழை பொழிவு குறைந்து வருவதை அடுத்து அங்கு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வளர் இளம் பெண்களின் ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வு நடைபயண பிரச்சாரம் காஞ்சிபுரத்தில் இன்று நடைபெற்றது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட இளம் பெண்கள் கலந்துகொண்டனர்.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் விடுமுறையை ஒட்டி சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

வானிலை

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கோவை மாவட்ட மலை பகுதிகள்,

நீலகிரி, திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், ராமநாதபுரம், தூத்துக்குடி, தென்காசி, நெல்லை, கன்னியாகுமரி ஆகிய 12 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குநர் திரு. செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.